சூட்கேசைத் தூக்கி மேலே வைத்தான், பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரிடம் சூட்கேசைப் பார்த்துக் கொள் ளச் சொல்லிவிட்டு ரயில் பெட்டியை விட்டுக் கீழே இறங்கித் தபால் பெட்டி தொங்கிக்கொண்டிருந்த இடத்தை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தான்.

## 2

*'நீ மொதல்லெ எயிதுறத எயிதன். அப்பறமா நான் சொல்றன்.'*

*'நீ விசயத்தைப் பூராத்தயும் ஒரே முட்டா சொல்லிப்புடு. நான் எல்லாத்தயும் எயிதிப்புட்டு படிச்சிக்காட்டுறன். ஏதாச்சும் வுட்டுப்போயிருந்தா படிச்சிக்காட்டறப்போ சொல்லு, சேத்து எயிதிப் புடுறன்.'*

*'இல்லெ தம்பி. மொதல்லெ 'என்னோட ஆச மவனுக்கு, ஒன்னோட அம்மா எயிதிக்கொண்டது, நான் ஊருலே நல்ல சொவமா இருக்கன். அங்கே ஒன்னோட சொவம் எப்பிடி, ஒடம்பு எப்பிடி'ன்னு எயிதுவ இல்லெ? அதெ எயிதிப்புடு. நான் பொறத்தாலெ சொல்றன்.'*

எதிரில் பித்துக்குளி மாதிரி உட்கார்ந்திருந்த மொட்டையம்மாளை வெறுப்புடன் பார்த்த சேகர், கீழே கிடந்த காலண்டர் அட்டையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, அதன்மீது நான்கு பக்கம் கொண்ட வெள்ளை முழுக் காகிதத்தை எடுத்து வைத்து எழுத ஆரம்பித்தான். ஆர்வம் பொங்க அவன் எழுதுவதையே அவள் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் மலர்ச்சி உண்டாயிற்று. இரண்டு வரிகளை எழுதி முடித்த சேகர், தலையைத் தூக்கிப் பார்க்காமலேயே அசட்டையாக 'சொல்லு' என்றான்.

'நான் சொல்லுறத செத்தெ ஒண்ணு வுடாம எயிது சாமி. ஒனக்குப் புண்ணியமா இருக்கும்.'

'சொல்லு.'

'நடுப்புற நடுப்புற வுட்டுட்டு எயிதிப்புடாத.'

'இதனாலதான் மனுசனுக்கு வேகோலம் வரது. எத்தனெ வாட்டி ஒனக்கு நான் லெட்டர் எயிதிருப்பன்? ஒரு வாட்டியாச்சும் அப்பிடி செஞ்சியிருக்கனா?'

'கோவிச்சுக்காதடா தம்பி. வுட்டுப்போயிடக் கூடாது பாரு, அதுக்காவச் சொன்னேன். ஒன்னெக் குத்தம் சொல்லலெ.'

'சீக்கிரம் சொல்லு, கட்டு எடுத்துடுவாங்க. திருநாச் செலவுக்கு ஐநூறு கேட்டதயும் மறந்துப்புடாத.'

'என்னாத்தெ சொல்லுறது? மனங்கெட்ட கேடு, நான் சொல்லுறன். 'நான் நல்ல சொவமா இருக்கன். நீ எப்பிடி இருக்கன்னு எனக்கு ஒரு சேதிபாதியும் தெரியலெ. மெட்ராசியிலெ இருந்து வந்த நம்ம ஊரு ஆளுவளும் ரெண்டு மூணு மாசமா ஒன்னெக் கண்ணாலக் கண்டதில்லன்னு சொல்றாங்க. அதனால எனக்கு ராத்தூக்கமில்லெ. இப்பிடி இருக்கன், அப்பிடி இருக்கன்னுகூடமா எயிதக் கூடாது? அதிலியா காசி செலவாப்பூடும்? ஒங்கிட்டேயிருந்து ஒரு நமோதும் இல்லங்கிற கொறதான் எனக்கு. மத்தது ஒண்ணு மில்லெ' என்று சொன்ன மொட்டையம்மாள் எழுதா மல் உட்கார்ந்துகொண்டிருந்த சேகரைச் சந்தேகமாகப் பார்த்தாள். எதுவுமில்லை என்பதுபோல் சாதாரண மாக, 'மேக்கொண்டு சொல்றதயும் சொல்லிப்புடு. மொத்தமா எயிதிப்புடுறன்' என்று அவன் சொன்னான். அதற்கு அவள் கெஞ்சுவது மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, உடைந்துபோன குரலில் 'தவறிப்போவும் தம்பி. செத்த சொல்லச்சொல்ல எயிதிப்புடன்' என்று சொல்லிக் கட்டாயப்படுத்த ஆரம்பித்ததும் சேகருக்கு வேறு வழியின்றிப்போயிற்று. வேகவேகமாக இரண்டு

மூன்று வரிகளை எழுதிவிட்டு வெறுப்புடன் 'அப்புறம்?' என்று கேட்டான்.

'அப்பாவோட தெவசத்துக்கு நீ ஏன் வல்லெ? மகத்துலெ பொட்டச்சி அரிசி கொடுக்கக் கூடாது, நீதான் வரணும்ன்னு எத்தன வாட்டி ஒனக்கு எயிதிப் போட்டன்? பெத்தவனுக்காக ஒன்னாலே ஒரு நாளு மெனக்கிட முடியலெ. அம்மாம் பெரிய வேலெயா, நீ பாக்குற வேலெ? நாளக்கி நான் செத்தாலும் நீ இப்படித்தானெ செய்வ? நான் ஒரு ஆத்துமா இருந்ததாலெ இன்னிக்கி காரியம் முடிஞ்சிபோச்சி. இல்லன்னா என்னா ஆவும்? மகத்துலெ அரிசி கொடுக் கிறது, பாப்பான்கிட்டெ நம்ப கருமத்தெத் தொலக்கத் தான். இதுகூடத் தெரியாம என்னா படுப்பு படிச்செ? இதுக்கு மெட்ராசியிலெ வேற வேலெ பாக்குறவன்' என்று சொல்லிவிட்டு சேகர் முகத்தைப் பார்த்தாள். அவன் எழுதிக்கொண்டிருந்தான். அவன் எழுதி முடிக் கும்வரை பேசாமல் இருந்துவிட்டு, அவன் எழுதி முடித்தது தெரிந்ததும் தானாகவே சொல்ல ஆரம்பித் தாள்.

'நேத்துத்தான் நம்ப ஊரு சாமிக்கிக் காப்புக் கட்டுனாங்க. முடிஞ்சா நாலு, அஞ்சி நாளு இருக்கிற மாரி வா. முடியாட்டி தேர் போடுற அன்னிக்காச்சும் வா. ஊருலெ தேரும் திருநாளுமா இருக்கிறப்ப, சொந்தம் பந்தமின்னு மக்கெ மனுச ஒண்ணாக் கூடுற நாளயிலே நீ வல்லன்னா எம் மனசு என்னா பாடு படும்? ஊரு சனங்கதான் ஒனக்கு வாண்டாம். சாமிகூடமா வாண் டாம்? ஊருலெ இருக்கிறவங்க எல்லாரும் சத்ராவிங்க தான். அதுக்காக ஊர வுட்டா ஓடிட முடியும்?' என்று சொன்னவள், சேகரைப் பார்த்தாள். அவன் எழுத ஆரம்பித்தான்.

'ஊட்டோட மேக்காலெ பக்க செவுரு சரிஞ்சிக் கிட்டு நிக்குது. முட்டுக் கயி கொடுத்திருக்கன். விட்ட

மும் லேசா மக்குனாப்லெ இருக்கு. பயய காலத்து ஊடு. ஊட்ட மேஞ்சா தேவலாம். இந்த வருசக் கோடக் காத்துக்குத் தாங்காது. நான் ஆம்பளயா, நாலு எடத்துக்கு ஓடி நாலு பேரக் கொண்டாந்து வேலெய முடிக்க? ஊட்டுலெ கைய வச்சா வல்லிசா ரெண்டாயிரமாவது புடிக்கும். நான் கெய்வி. என்னாலெ என்னா முடியும்? ஆளு இல்லாதவன் பொயப்பு அர பொயப்புதான்.

'காசிய மிச்சப்படுத்தறன்னு சொல்லி வவுத்தக் கட்டாத. புடிச்சா பாரு, இல்லன்னா வந்துடு. வேலெ போனா செருப்பாச்சி. ஒப்பன், பாட்டனெல்லாம் காட்டு வேலெ செஞ்சி இந்த ஊருலெ பொயிக்கிலியா? செத்தாப்போயிட்டாங்க? வவுத்தக் காயப்போட்டு சம்பாரிச்சி என்னா செய்யப்போற? அப்பிடித்தான் மெத்த மாளி கட்டலாமின்னா அப்பிடிப்பட்ட மெத்த மாளி நம்பளுக்கு வாண்டாம். நல்லா சாப்புடு. வவுத்துக்கு வஞ்சன வெக்காதெ. ஒடம்ப எளக்க வுடாத. ஒடம்புதான் சொத்து. அது இருந்தா நாலு எடத்துக்கு ஓடிப் போயி பொயிச்சிக்கலாம். காசி பத்தலன்னா சொல்லு, இங்க இருக்கிற ரெண்டு பயிர் ஆட்டெயும் வித்து அனுப்புறன்.

'சொல்ல மறந்துட்டன் பாரு. போன ஒரு மாசத்திலியே ஒண்ணு வுட்டு ஒண்ணுன்னு மூணு ஆடுவோ குட்டிப் போட்டிச்சி. அதுலெ மூணு கொறா, ரெண்டு கெடா. ஒரு ஆடு மட்டும் சாவுக் குட்டியாப் போச்சி. அதுவோதான் இப்ப என்னெப் புள்ளிவுளாட்டம் சுத்திச்சுத்தி வருதுவோ. குடும்பத்தோட குல தெய்வத்துக்கு மொட்டபோட்டுப் பூசப்போடுறன், ஒரு குட்டி கொடுன்னு ஒரு குடித்தெரு ஆளு வந்து கேட்டான், முடியாதுன்னுட்டன். எயிதறியா தம்பி?'

'எயிதிக்கிட்டுத்தான் இருக்கன், சொல்லு.'

'எம் மவனுக்கு ஒரு கண்ணாலம் காச்சி நடக்கலியேன்னு சொல்லி நம்ப பொயனப்பாடி ஆண்டவர்

கோவுலுக்கு ரெண்டு மூணு வரிசத்துக்கு மின்னாடி ஒரு கெடாவ நேந்துவுட்டடன். அது இப்ப என்னடான்னா மாடாட்டம் வளந்துபோயி நிக்குது. பாக்குற சனமெல்லாம் வித்துதப்புடுன்னு சொல்லுதுவோ. நானு வாய் பேச முடியாம கெடக்குறன். ஆட்டே கொண்டுபோயி கோவுல்லெ வுட்டுடலாமின்னு இருக்கிறன். நீ என்னா சொல்ற?'

சேகர் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட மொட்டையம்மாள், 'என்னா தம்பி என்னியே பாக்குற? நான் சொல்றத எல்லாம் ஊகமா எயிதறியா?' என்று லேசாகச் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'எயிதிகிட்டுத்தான் வரன். மேலெ சொல்லு... நான் கேட்ட ஐநூறு எப்ப கெடெக்கும்?' என்றான் சேகர்.

'ஒனக்கு இல்லாமியா?' என்றவள், கசந்துபோன குரலில் சொன்னாள், 'ஒரு காச்ச, தலவலின்னாகூட கேக்கறதுக்கு நாதி பிராதி கெடயாது. தனிப் பொணமா கெடக்குறன். நான் இன்னிக்கி செத்தன்னா எம் பொணத்தோட தலமோட்டுலெ குந்தி அயுவறதுக்கு ஒரு ஆளு இல்லெ. பொட்டெப் புள்ளையா இருந்தாலும் நான் செத்தாக்கா ஐயோ என்னெ பெத்த தாயாரேன்னு சொல்லி மாரடிச்சிக்கிட்டு அயுவும். எனக்கு அந்தக் கொடுப்பன இல்லெ. தாலி கட்டிக்கிட்டு ஒங்கப்பன்காரன் கூட வந்ததுலேருந்து எனக்கு எந்தக் கொடுப்பனதான் இருந்துச்சு? அதுக்குத்தான் சொல்றன், என் மூச்சிருக்கயிலே ஒரு குட்டிக்கி தாலியக் கட்டிக் கொண்டாந்துடு. ஒப்பன் பேர சொல்லலன்னாலும் ஒம் பேர சொல்லவாச்சும் ஒரு நாதி வாணாமா? எம்மாங் காலத்துக்கு இப்பிடி? ஒரு நாளக்காச்சும் ஊரு நாடுன்னு வந்து சேர வாணாமா? ஆடு திருடற, மாடு திருடற ஊரா இருந்தாலும் நம்பளுக்கின்னு நாலு மக்கெ மனுச இல்லாமியா போயிடுவாங்க? ஆதியிலெ நடந்ததியே நெனச்சிக்கிட்டிருந்தா முடியுமா? மருந்த முயிங்குறாப்ல

போவணும். இல்லாட்டி நாளு ஓடாது. ஊருன்னு இருந்தா நாலு விதமாத்தான் இருக்கும். மின்னாலெ ஒண்ணும், பின்னாலெ ஒண்ணும், சொல்வாங்கதான் சனங்கன்னு இருந்தா இப்பிடித்தான். காது கேக்கல, கண்ணு பாக்கலென்னு நாமதான் ஒதுங்கிக் கால சீவனத்த ஓட்டிக்கிட்டுப் போவணும். யாரப் பாத் தாலும் ஒங்களெப் போல உண்டான்னுட்டுப் போவ ணும். தண்ணீக்கிப் போன சாந்தி குட்டியோட சடய நீ புடிச்சி இயித்தன்னு சொல்லி நாலு குள்ளேறிப் பயலுவோ பஞ்சாயத்து கூட்டுனதுக்கு ஊரு என்னாப் பண்ணும்? ஊருலெ இருக்கிற நாலு நாதேறிவோ கட்டிவச்ச கங்காட்சியாலெ இன்னா பொயிதின்னு இல்லாம, ராவோட ராவா ஊட்ட வுட்டுப் போன புள்ளெய ஒரு வரிசமா காணலியேன்னு எங் கட்டெ காத்தாப் பறக்குது. ஒரு வேளெக்கி மறுவேளெ சோத் தக் கண்டா ‘ஆ’ன்னு அமுட்டிக்கிட்டு வருது. ராத்திரி யிலெ கண்ணெ மூட முடியலெ. ராவும் பவலும் ஒங் கவலெதான் எனக்கு. புள்ளெ இந்நாரம் எங்கெ நிக் குதோ, சோறுதண்ணீ குடிச்சிச்சோ இல்லியோன்னு எங்கொல பதறிப்போவுது. நீ என்னெப் பத்தி ஒண்ணும் நெனக்காத. காடு வா வாங்குது, ஊடு போ போங்குது. இனிமே என்னா கெடக்கு? இருந்த முட்டும் இருந் தோம் வேளெ வந்தா போவ வேண்டியதுதானெ. முடி யாது இன்னா முடியுமா? காய பூவத் தின்னு இனுமே எத்தன காலத்துக்கு சம்பத்தா வாயிந்திடப்போறன். அதனால என்னெ நெனச்சிக்கிட்டு நீ மனசத் தளர வுடாத.’ மொட்டையம்மாள் பேசுவதை நிறுத்திவிட் டுத் தலையைக் குனிந்துகொண்டு சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். சேகர் எழுதுகிறானா, இல்லையா என்றுகூட அவள் பார்க்கவில்லை. ‘அப்பறம்... அப்பறம்’ என்று சேகர் கேட்ட பிறகுதான் தலையைத் தூக்கிப் பார்த்தாள். முந்தானையால் கண்களையும்

முகத்தையும் துடைத்துக்கொண்டு கம்மலான குரலில் தொடர்ந்தாள்.

'செத்துப்போன ஒப்பங்காரன் நாள் தவறாம எஞ் சொப்பனத்திலெ வந்துட்டு வந்துட்டுப் போறான். செத்தவங்க சொப்பனத்திலெ வர்றது குடும்பத்துக்கு நல்லதில்லெ. குடும்பத்துக்கு ஆவாது. குடும்பம் விருத் திக்கி வராது. நம் குடும்பத்திலெ என்னா இருக்கு, யார் இருக்கான்னு சொல்லி நீ யோசிக்காத. நான் கெய்வி. நான் சுடுகாட்டுக்குப் போவலாம். ஒன்னெ நெனச்சாத் தான் எம் மனசு ஆற மாட்டடங்குது. அதனால் சட்டு சடுக்குன்னு ஒரு குட்டியப் பாத்து முடிச்சிடலாமின்னு இருக்கன். ஒனக்குன்னு ஒருத்தி வந்துட்டா எங் கவல வுட்டுடும். எங் கட்ட சீக்கிரமா மசானக்கரயிலெ வெந்துடும். மனக்கொறயோட ஆவியா அலயாது. எனக்கு என்னா இருக்கு? ஆனமுட்டும் பாக்குறன், ஆவாட்டி சாவறன். ஒரு கவலயுமில்லெ. பாலு குடிக்கிற புள்ளெய வுட்டுட்டு சாவறமேன்னு கவலயா, இல்லெ நண்டும்சிண்டுமா இருக்கிற புள்ளிவுளெ வுட்டுட்டு சாவறேன்னு கவலயா? ஒண்ணும் கெடயாது. சாவு வல்லியேங்கிற கவலதான். அது ஒண்ணுதான் மனக் கொறயா இருக்கு... என்ன, எயிதிகிட்டு வரியா தம்பி?'

'பின்னே, கொஞ்சம் பொறுமயா சொல்லு.'

'எம் மனசுல இருக்கிற கொறயெல்லாம் சொன்னா எயிதுறதுக்கு இந்த மாரி ரெண்டு மாட்டு வண்டி காயிதம் பத்தாது. என்னாப் பண்றது? சரி, நீ எயிது.'

'எம் மனசுல ஒரு கோரிக்கப் பண்ணிக்கிட்டு இருக் கன். அது சரிவந்தா சொல்லு, இல்லன்னா வுட்டுடு. நம்ப ஊருலெ இருக்கிறானே கஞ்சிகாச்சி, அவனோட பெரிய மவன் மூக்கன் இருக்கானில்லே, அவனுக்கு நாலும் பொட்டெ. அதுலெ மூணு குட்டிக்கிக் கண்ணாலமாயிப் போயிட்டாளுவ, கடேசி குட்டி இருக்கிறா. அவ பேரு என்னா தம்பி?, ம், வனமயிலு.

பாக்குறதுக்கு வள்ள மாட்டம் இருந்தாலும் பதக்க மாட்டம் இருப்பா. நம்ப ஊருலெ அவ ஒருத்தித்தான் எடுப்பா கண்ணுக்குப் பொருத்தமா இருக்கிறா. வெகு நாளா மனசிலெ ஆச இருந்தாலும் போன எட்டாம் நாளுதான் கேட்டன். ஆட்டுக்குத் தவ ஒடிக்க வந்தவ கிட்டெ 'சம்மதமாடி'ன்னு நேராவே கேட்டன். படிச் சவரு. மெட்ராசிலெ வேலெபாக்குறவருக்கு கள வெட்டுற, கரும்புக் கட்டு தூக்குற என்னெயெல்லாம் புடிக்குமான்னு திலுப்பிக் கேட்டுப்புட்டா. என்னாலெ வதுலு பேச முடியலெ. அவ மனசிலயும் ஆச இருக்கு மாட்டம் இருக்கு. அவ ருதுவான சாதகத்தையும் ஒன் னோட சாதகத்தயும் போட்டுப் பாத்தன். இந்த மாரி சாதகப் பொருத்தம் நூத்திலெ ஒண்ணுதான் அமயு மின்னு அய்யரு அடிச்சிச் சொல்றான். எல்லாப் பொருத்தத்தயும்விட மொகப் பொருத்தம் இருந்தா சரிதான். மொக வாட்டமான குட்டிதான் அவ.

'உள்ளூர்னா பாடுனாலும் பேசுனாலும் எடுத்து வச்சிப் பாக்கும். நான் நாளக்கி செத்தா நாலு சனம் கூட்டமா வந்து எம் பொணத்தெ எடுத்துப்போடும். இந்த ஊருலெ நம்பிளுக்குன்னு நாலு சனம் வாணாமா? பெரிய கூட்டமுள்ள குடும்பம் அது. மேக்காலத் தெருவே அவ கூட்டம்தான். காசி ஆப்புடுதின்னு பட்டணத்தோட போயிட முடியுமா? பட்டணத்துக் காரனுவோ பகரா வெள்ளச் சட்டத்தான் போட்டிருப் பானுவோ. நெயலு வாட்டத்திலே குந்தி இருக்கிற தாலெ பொட்டச்சிவுளும் கொஞ்சம் வெளுப்பாத்தான் இருப்பாளுவோ. மத்தது ஒண்ணுமில்லே. ரெண்டு நாளக்கி ஆடுவோகூட நடந்தாளுவோன்னா கூர மேலெ காயப் போட்ட கருவாடு மாரி ஆயிப் போயிடுவாளுவோ. நான் சொல்லுறது நெசம்தான். வெளுத்தத் தோலுக்காகப் பொண்ணு கட்ட முடியுமா? காசி பணம் என்னா செய்யும்? சனங்களெ சம்பாரிக்

கிறதுதான் கஷ்டம். நாளக்கி நான் செத்தா காசி பணமா வந்து மாரடிச்சி அயிவப்போவுது? உத்தெ மனுசாள் தான் ரெண்டு சொட்டுக் கண்ணு தண்ணீ வுடும். காசிப் பணம் நம்பளுக்கு வாணாம். காசிப் பணத்தப் பாத்தா நான் ஒங்கப்பனுக்குப் புள்ளெ பெத்தன்? காசிப் பணம் இருந்தா ஊரு மெச்சத் துணி கட்டலாம், நாலு நகயப் போட்டுப் பாக்கலாம். வேறென்ன? எல்லா ஆட்டமும் இந்தக் கட்டயிலெ உசுரு இருக்க மட்டும்தான? அப்புறம் ஒண்ணும் இல்லெ.

'காசிப் பணத்துக்கு ஆசப்பட்டா ஒன்னெப் படிக்க வச்சன்? அப்பிடி இருந்தா அப்பறமென்ன? நீ எட்டா வதோ ஒம்பதாவதோ படிக்கிறப்ப, ஒப்பன் காயிலாவுல கெடந்தப்ப, ஒங்க பெரியப்பங்காரன் வந்து இனிமே பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வாணாம். எங்கூட அனுப்பு, மோளம் கத்துக்கிட்டான்னா ரெண்டு காசி வரும்ன்னு சொல்லி ஒங் கையப் புடிச்சி அயிச்சிக் கிட்டுப் போனான். ஒப்பன்காரன் மரமாட்டம் பாத்துக் கிட்டு நின்னான். அண்ணங்காரனெ எதுத்துப் பேச அவனுக்கு வாய் வல்லெ. 'என்னடா இது, நம்ப வச்சி யிருக்கிறதே ஒரு புள்ளெ, அதெயும் மோளமடிக்கக் கூப்புட்டுக்கிட்டுப் போறன்னு போறானேன்'னு சொல்லி, பாதி தெருவுக்கு ஓட்டமா ஓடிப்போயி ஒங்க பெரியப்பங்காரன் கால்ல வியிந்து கும்புட்டு, 'எம் புள்ளெய வுட்டுடு, அது செத்தாலும் சாவட்டும், இந்த வயிசியிலே ஒயச்சித் திங்க வாணாம், அதிலயும் சாவு மோளமடிச்சி திங்க வாணாம்'ன்னு சொல்லி அயிதன். அவன் என்னெ எட்டி ஒதச்சிப்புட்டு எப்பிடியாச்சும் போடின்னு சொல்லிப்புட்டுப் போனான். அப்ப நான் ஒங்கால்ல வியிந்து பள்ளிக்கூடத்துக்குப் போ சாமின்னு கும்புட்டன். மத்த சனங்க மாரி நான் ஒன்னெ அதெ செய், இதெ செய், மாடு மேய்க்க, ஆடு மேய்க்கப் போன்னு சொன்னது கெடயாது. அதெல்லாம்

ஒனக்கு நெனவுல இருக்கோ இல்லியோ. என்னால மறக்க முடியுமா? பெத்தவளாச்சே' என்று சொல்லும் போதே மொட்டையம்மாளுக்கு அழுகை வந்து விட்டது. முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். அவ ளுடைய உடம்பு குலுங்கியது. சேகர் எழுதுவதை நிறுத்திவிட்டு அழுதுகொண்டிருந்தவளையே பார்த்த வாறு இருந்தான் கொஞ்ச நேரத்திற்கு மேல் அவனுக் குப் பொறுமை இல்லை. 'அப்பறஞ் சொல்லு' என்று முறைத்தான். அதன் பிறகுதான் முகத்தை நிமிர்த்திக் கொண்டு மொட்டையம்மாள் மீண்டும் சொல்ல ஆரம் பித்தாள்.

'நான் சொல்றன்ங்கிறதுக்காக நீ ஒருத்தியயும் கட்ட வாணாம். எனக்கு இவளத்தான் புடிச்சியிருக் குன்னு சொல்லி நீ ஒரு நரிகொறத்தியக் கொண் டாந்தாலும் எனக்குப் பரிபூரண சம்மதம்தான். எனக் கென்னா? நானா அவகூட குடும்பம் நடத்தப்போறன்? நான் கண்ணெ மூடிட்டப் பின்னாலெ இந்த ஊடு இருளடஞ்சி கெடக்கக் கூடாது. அதத்தான் ஒங்கிட்டெ வேண்டுறன். நல்லது நடந்துச்சோ கெட்டது நடத்துச்சோ, எப்பிடியோ எங் காலம் ஓடிப்போயிடிச்சி. இனி ஒங் காலம்தான. எப்பிடியோ எங் காலமா இருந்தா ஒரு கைப்புடி சோள நொய்யும் ரெண்டு கொத்து முருங்க தவயும் இருந்தாப் போதும். ஒரு நாப் பொயிது ஓடிடும். இன்னிக்கி அப்பிடியா?' என்று சொன்னவள், நிராசை யுடன் சேகரிடம் கேட்டாள்: 'என்னா தம்பி, நாலே நாலு வரிதான் எயிதிருக்க? நான் சொன்னத எல்லாத் தயும் எயிதலியா?'

'நீ சொன்னதுல ஒண்ணுகூட வுடலெ. வேணு மின்னா படிச்சிக்காட்டட்டா?' என்று சட்டென்று கேட்டதும், 'படி' என்று சொல்லத்தான் நினைத்தாள். என்மேல் நம்பிக்கை இல்லையா என்று கேட்டுப் பாதியிலேயே போட்டுவிட்டுப் போய்விட்டால் என்ன

செய்வதென்ற கவலையில் லேசாகப் பசப்புச் சிரிப்பு சிரித்து, 'ஓம் பேர்ல நம்பிக்க இல்லாமியா?...இம்புட்டு நேரத்துக்கும் நாலே வரி எயிதிருக்கியே, கனமா இல்லியேன்னு கேட்டன்' என்று சொல்லிப் பசப் பினாள்.

'எல்லாம் சரியாத்தான் இருக்கு. கடேசிலே படிச்சிக்காட்டுறன். மேலெ சொல்லு' என்று வெறுப் புடன் சொல்லிவிட்டு எழுதுவதற்குத் தயாரானான்.

'எந்த எடத்திலெ வுட்டன்?' என்று மொட்டை யம்மாள் கேட்டதும், 'வனமயில் கண்ணாலம் கட்டு றதப் பத்தி' என்று சேகர் எடுத்துக் கொடுத்தான். அவன் சொன்னதைக் காதில் வாங்காதவள் போல உட்கார்ந் திருந்தவள், திடீரென்று நினைவுக்கு வந்ததைச் சொல் வது மாதிரி சொன்னாள்.

'தம்பி, ஒன்னோட பேர் நாமத்துக்கு பாத்தன். இன்னம் மூணு மாசத்துக்குள்ளார வெரய செலவு வரும்ன்னு இருக்காம். அதோடவும் நாடு வுட்டு நாடு போவணும்ன்னும் இருக்காம். கேடு காலம் வந்தா மணியடிச்சிக்கிட்டு வராது. போற, வர எடத்திலெ வாய் பதனமா, கை பதனமா இரு. காரு, ரயிலு ஏறயிலெ பாத்து ஏறு, பாத்து எறங்கு. ஒனக்கு ஒண்ணு ஆச்சின்னா அவ்வளவுதான். என் உசுரு தங்காது. ராவும் பவலும் ஒங் கவலதான் எனக்கு. ஒங்கூடப் பொறந்ததெல்லாம் உசுரோட இருந்திருந்தா எனக்கு இம்மாம் மனக்கவல இருக்காது. ஒங்கூடப் பொறந்தது மொத்தம் ஆறு புள்ளிவோ. மொத ரெண்டும் செத்துசெத்துப் பொறந் துச்சி. சாவு புள்ளெயா பெக்குறன்னு சொல்லி என் மாமியாக்காரி, அதாம் ஒப்பனப் பெத்த பாட்டியா, என்னெ ஒதுக்கிவச்சிட்டா. ஒப்பன் ஊட்டு சனங்களும் எங்கிட்டெ மொவம் கொடுத்துப் பேசாதுவோ. அந்தக் கெய்வி அம்மாம் கட்டுமானம் பண்ணிவச்சியிருந்தா. மூணாவதா நீ பொறந்த. புள்ளெ பெத்துக் கிடந்தவள

என்னா ஏதுன்னு யாரும் வந்து எட்டிப் பாக்கலெ. நானேதான் பச்ச ஒடம்போட காயம் அரச்சித் தின்னன். அப்பறம் பொண்ணு ரெண்டு, ஆணு ஒண்ணு பொறந் துச்சி. வரிசியா புள்ளிவோ பொறந்தாலும் ஒண்ணும் நெலச்சித் தரிச்சி வாயல. அவசரஅவசரமின்னு ஆறு மாசம் ஒரு வருசமின்னு ஒவ்வொன்னும் மண்ணுக் குள்ளாரப் போயிடிச்சிவோ. எல்லாத்தயும் வாரிக் கொடுத்துட்டன். ஒப்பனும் போயி சேந்துட்டான். இப்ப நீ ஒருத்தன்தான் இருக்க. நீதான் எனக்கு குல குருவா இருக்க. அப்பிடித்தான் நான் எண்ணிக்கிட் டிருக்கன். நீயும் எனக்குக் காம்பக் காட்டிப்புடாத.'

எழுதிக்கொண்டே, 'இன்னம் இருக்கா?' என்று சேகர் கேட்டான். அவன் கேட்ட விதத்தைப் புரிந்து கொள்ளாமல் கண்கள் கலங்க, உடைந்துபோன குரலில் மொட்டையம்மாள் தரையைப் பார்த்தவாறு சொன் னாள்.

'ஒண்ணெ ஒண்ணுதான் எம் மனசிலெ இருக்கு. நான் செத்தா எம் பொணத்த ஊரு மெச்ச எடுக்கணும். தேர்ப் பாடெ கட்டு. ஒப்பனுக்குக் கட்டுனாப்ல. உள்ளூர்ப் பற மோளத்தோட, பாசாரு தம்ரு மோளமும் வை. பாடெ மத்தியிலெ கொல்லுக் காசி பிரிக்கயிலெ கைகூசாம தோட்டி, தொம்பன், வண்ணான், கூத் தாடின்னு ஒருவரும் மனங்கோணக் கூடாது. கேட்ட காசியக் கொடுத்துப்புடு. கசம்பன்னு பேரு எடுக்காத. நம்ப ஊட்டுலெ எஞ் சாவுதான் கடேசி சாவு. அதனால வாணவெடி வுடு. கயிதூரு ஆட்டக்காரி செடலோட ஆட்டம் வை. ராத்திரிக்குக் கர்ணமோட்சம் கூத்து வைக்காம வுட்டுப்புடாத. இதுக்கெல்லாம் நீ கையறுத் துக்க வேண்டியதில்லெ. ரெண்டு பயிர் ஆடு இருக்கு. இன்னிக்கி வித்தாக்கூட இருவதனாயிரம், முப் பதனாயிரம் போவும். அப்பப்ப ஆடு வித்தது, குட்டி வித்தது, சாவு ஆடு வித்ததுன்னு வந்த காசியில, ரெண்டு

ஊட்டுக்குண்டான சாமான வாங்கிவச்சிருக்கன். ஒரு கூண்டு கோயி இருக்கு. அதெ வித்துக் காசாக்கிப்புடு. வாரத்துக்கு ஆறு பன்னிக்குட்டிவுளெப் புடிச்சிவுட்டிருக்கன். அதுவுளயும் காசாக்கிப்புடு. அதோட வடக்குத் தெரு காசியம்மா வல்லிசா மூணாயிரம் தரணும். வாங்கி ரெண்டு வருசமாச்சி. பாண்டு பத்திரமின்னு ஒண்ணுமில்லெ. பக்கத்து ஊட்டு வேலாயி மவ வயசிக்கு வந்தப்ப நானூறு வாங்குனா. கேட்டா 'இந்தா இந்தா'ங்கிறா. காசி கையிக்கு வரல. இந்த மாரி இன்னம் ரெண்டு ஒருத்தர் தரணும். தோட்டி மவன் பெரிய பய கண்ணாலத்துக்கு ஒரு மரக்கா அரிசியும், ஒரு தூக்குப் புளியும், ரெண்டு பரங்கிக்காயும் வச்சன். இப்பிடி ஊரு மூச்சூடும் செய்வின செஞ்சி வச்சிருக்கன். நாளக்கி நம்பப் புள்ளெக்கி நாலு சனம் வரணுமே, செய்யணுமேன்னு, எல்லாத்தயும் ஊகமா ஒரு சீட்டுலெ எயிதி வச்சியிருக்கன். யாரும் திலுப்பி செய்யலன்னா கேக்கணுமில்லெ. அதுக்காக நாளு கெயமயோட விகரமா எயிதிவச்சிருக்கன்.'

'சீட்டு ஆவப்போவுது. சீக்கிரமா சொல்லு.'

'ஒரு சீட்டுதான் கொண்டாந்தியா?'

'ஆமாம், ஆமாம்'

'அப்ப இதெ மட்டும் எயிதிப்புடு' என்று சொன்னவள், சந்தேகத்துடன் 'இன்னம் ரவ எடந்தான் இருக்கா?' என்று கேட்டாள். ஆமாம் என்பதுபோல் சலிப்புடன் தலையை மட்டும் ஆட்டினான் சேகர்.

'ரெண்டே ரெண்டு வாத்ததான். எயிதிப்புடு' என்றவள், சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னாள்.

'அம்மா ஏதாச்சும் நெனச்சுக்குவான்னு பணம் காசி அனுப்பாத. சீல துணியும் வாணாம். நான் என்ன, எளங்குட்டியா புதுத் துணி கட்டிப்பாக்க, ஆசப்பட. எனக்காக நீ ஒன் ஒயலெ செலுவுபண்ணாத. ரத்த ஓட்டம் இருக்கமுட்டும் நானே பாத்துக்கிறன்' என்று

சொன்ன மொட்டையம்மாள் சிறுபிள்ளை மாதிரி ஏக்கத்துடன் 'இன்னம் ரவ எடமிருக்குமா?' என்று கேட்டாள். இல்லை என்பதற்கு சேகர் உதட்டை மட்டுமே பிதுக்கிக் காட்டினான்.

சேகர் எழுதிக்கொண்டிருந்தான். அவன் எழுது வதை ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தாள் மொட் டையம்மாள். அவன் எழுதி முடித்துக் காகிதத்தை மடித்து உறைக்குள் போடப்போனபோது ரொம்ப ஆவலாக, 'செத்த படிச்சிக்காட்டடன்' என்று கேட்டாள், 'எல்லாம் சரியாத்தான் எயிதிருக்கு. மனுசனுக்கு வேற வேலெ இல்லியா?' என்று வெடுக்கென்று சொன்னவன், காகிதத்தை உறைக்குள் போட்டு ஒட்டி, விலாசம் எழுதினான். அப்போது மொட்டையம்மாளின் முகம் மாறிற்று. வெறுப்புடன் அவனைப் பார்த்து 'என் னாத்தெ எல்லாத்தயும் எயிதினெ? நான் இங்க சொவம். நீ அங்க சொவமா? ஊருலெ திருநா போட் டிருக்கு. அவசியம் வா. ஒங்கிட்டே நெறயா பேசணும். நேர்ல வா. எல்லாத்தயும் பேசிக்கலாமின்னு எயிதி ருக்க. அதான? எனக்கு எல்லாமும் தெரியும்டா தம்பி' என்று சொல்லிவிட்டு அவனிடமிருந்து பிடுங்காத குறையாகக் கடித உறையை வாங்கிக்கொண்டாள். உண்மை வெளிப்பட்டுவிட்ட வெட்கத்தில் சேகர் ஒன்றும் சொல்லாமல் அவசரமாக எழுந்து வெளியே போனான். ●